சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை நகர பஞ்சாயத்தில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரிவு அலுவலகம் கட்டும் திட்டம் – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ட்டி1) துறை

அரசாணை (நிலை) எண்.137 நாள் 4.8.2009.

ஆடி 19
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்க:–

தலைமைப் பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை,
கடித எண்.எப்/9000/2008, நாள்.20.1.2009

-----

ஆணை:

நீர்வள ஆதாரத் துறை, திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட அவருடைய கடிதத்தில் வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவையில் பிரிவு அலுவலகம் கட்டும் திட்டத்திற்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார். வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை பஞ்சாயத்தில் உள்ள பிரிவு அலுவலகமானது மிகவும் பழுதடைந்துள்ளது என்றும், இக்கட்டிடம் 1948ம் ஆண்டு கட்டப்பட்டது என்றும் பழுதடைந்தக் கட்டிடத்தில் அலுவலகக் கோப்புகளை பாதுகாக்க சிரமமாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். எனவே, தற்போது ஒரு புதிய கட்டிடம் கட்டுதல் தேவையாகின்றது என்றும் இக்கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 60 சதுர மீட்டர் என்றும், 2009–2010ம் ஆண்டு விலைவிகிதப்படி இதன் மதிப்பீடு ரூ.6.00 இலட்சங்கள் ஆகும் எனவும், இத்திட்டத்தினை நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட பணியினை 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. இதனடிப்படையில் 2009–2010–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், கலவை நகர பஞ்சாயத்தில் பிரிவு அலுவலகம் கட்டும் திட்டத்திற்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் (2009–2010ம் ஆண்டு விலைவிகிதப்படி) மேற்கொள்ள அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி, அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த பணி(Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4701 – பெரிய நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு–03 நடுத்தர பாசனம் வணிகத் தன்மை வாய்ந்தது–380–பொதுப்பணித்துறை நீர் ஆதார அமைப்பு அலுவலகக் கட்டிடம் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்ட பணிகள் II மாநில திட்டம்–JD. வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம் கலவையில் பிரிவு அலுவலகம் கட்டும் பணி –16 பெரும் பணிகள் "
(து.தொ.கு. 4701–03–380–JD –1609).

4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள், அனுமதிக்கப்பட்ட தொகைக்குள் செய்து முடிக்கவும், திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அரசுக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.குறிப்பு எண்.33434/பொ.ப.II/2009 நாள்.18.6.2009ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், சென்னை 5.
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்),
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர்
மாநில கணக்காயர், சென்னை.18/35
நகல்
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.IIதுறை, சென்னை.9
பொ.ப.(சி.பா.1) துறை, சென்னை 9
(5 நகல்கள்).

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்